மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீா்காழி

முன்னிலை – **திருமதி V. பாா்கவி,B.A.B.L.,L.L.M.,**
மாவட்ட உரிமையியல் நீதிபதி , சீா்காழி
********

2022–ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 24–ம்நாள் வியாழக்கிழமை
திருவள்ளுவர் ஆண்டு 2053, பிலவ வருடம் மாசி மாதம் 12–ம்நாள்
**********

**அசல் வழக்கு எண். 21/2016–ல் இடைமனு எண். 1336/2018**

1. சின்னதுரை
2. பூங்கோதை
3. செந்தில்குமாா் ...மனுதாரா்கள்/வாதிகள்

....எதிா்.....

1. சுரேஷ்
2. கணேசன் ..எதிா்மனுதாரா்கள்/பிரதிவாதகள்

இம்மனு இந்நீதிமன்றத்தில் என்முன்பாக 04.02.2022 அன்று இறுதியாக விசாரணைக்கு எடுக்கப்பட்டு மனுதாரா்கள் தரப்பில் வழக்கறிஞா்கள் திரு. எஸ்.சுந்தரய்யா அவா்களும், 1,2–ம் எதிா்மனுதாரா்கள் தரப்பில் வழக்கறிஞா் திருமதி வி. சாந்தி அவா்களும் ஆஜராகியும், இருதரப்பு வாதுரைகளைக் கேட்டும், வழக்கு ஆவணங்களை பாிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்.

**உத்தரவு**

இந்நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவை மதிக்காமல் உத்தரவை மீறி எதிா்மனுதாரா்கள்/பிரதிவாதிகள் செயல்படுவதால் எதிா்மனுதாரா்களை கைது செய்து சிவில் சிறைக்கு அனுப்ப உத்தரவிடக்கோாி மனுதாரா்களால் இம்மனு உ.வி.மு..ச.கட்டளை 39, விதி 2 A –ன்படி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **மனுவின் சுருக்கம்**

மனுதாரா்கள் அசல் வழக்கின் வாதிகள். அசல் வழக்கு எதிா்மனுதாரா்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக் கட்டளை பாிகாரம் கோாி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கு முடியும்வரையில் தற்காலிக உறுத்துக்கட்டளை உத்தரவு கோாி மனுதாரா்கள் இடைமனு எண். 76/16 தாக்கல் செய்து அந்த மனு முழு விசாரணைக்குப் பிறகு அனுமதிக்கப்பட்டு அதில் இடைக்கால உறுத்துக்கட்டளை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. தற்போது எதிா்மனுதாரா்கள் அவா்களது சொத்தில் தாவாச்சொத்திற்கு தென்புறத்தில் மனுதாரா்களுக்கு சொந்தமான சந்தில் 27.07.2018 அன்று ஆக்கிரமித்து வீடு கட்ட புதவடை தோண்டி கட்டுமான பணி தொடங்கியுள்ளனா். எதிா்மனுதாரா்களின் இந்த

செய்கையானது இந்நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவை மீறிய செயலாகும். இந்நீதிமன்ற உத்தரவை மதிக்காமல் எதிர்மனுதாரர்கள் செயல்படுகிறார்கள். எதிர்மனுதாரர்களின் சட்டப்புறம்பான செய்கையை பற்றி மனுதாரர்கள் 27.07.2018 அன்றே வைத்தீஸ்வரன்கோயில் காவல்நிலையத்தில் புகார் கொடுத்து அதன்மீது காவல்துறையினர் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. எதிர்மனுதாரர்கள் தொடர்ந்து வேலை செய்து வந்ததால் மனுதாரர்கள் 03.08.2018 அன்று நாகப்பட்டினம் மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் நேரடியாக புகார் கொடுத்தார் அதற்கு காவல்துறையினர் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை, மீண்டும் மனுதாரர்கள் 20.08.2018 அன்று நாகப்பட்டினம் காவல் கண்காணிப்பாளரிடம் புகார் கொடுத்துள்ளனர். காவல்துறையில் மனுதாரர்கள் கொடுத்த மேற்கண்ட 3 புகார்களுக்கும் எவ்விதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. எதிர்மனுதாரர்கள் தொடர்ந்து கட்டிட வேலை செய்து வருகிறார்கள் அந்த செய்கையை மனுதாரர்களால் தடுக்க முடியவில்லை. எனவே இந்நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவை மதிக்காமல் எதிர்மனுதாரர்கள் செயல்படுவதால் எதிர்மனுதாரர்களை கைது செய்து சிவில் சிறைக்கு அனுப்ப உத்தரவிடக்கோரியுள்ள இம்மனுவை அனுமதிக்க வேண்டும்.

3. <u>2-ம் எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டு 1-ம் எதிர்மனுதாரரால் தன்னுடையதாகவும் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிரையின் சுருக்கம்</u>

மனு சட்டப்படியும், சங்கதிகளின்படியும் நிலைநிற்கத்தக்கதல்ல. மனுதாரர்கள்/வாதிகளுக்கு சொந்தமான சந்தில் எதிர்மனுதாரர்கள் 27.07.2018 அன்று ஆக்கிரமித்து வீடுகட்ட புதவடை தோண்டி கட்டுமானம் தொடங்கியுள்ளதாகக் கூறியுள்ளது பொய்யானது. தாவா சொத்தில் எதிர்மனுதாரர்கள் எந்தவிதமான ஆக்கிரமிப்பும் செய்யவில்லை. மாறாக 2-ம்எதிர்மனுதாரர்/2-ம்பிரதிவாதிக்கு சொந்தமான தாவாவில் சேராத இடத்தில்தான் கட்டுமான பணியை துவக்கியுள்ளார். எனவே 2-ம் எதிர்மனுதாரரின் இந்த செயல் நீதிமன்ற உத்தரவை மீறிய செயல் ஆகாது. 2-ம் பிரதிவாதிக்கு சொந்தமான சொத்தில்தான் கட்டுமான வேலைகள் நடைபெற்று வருகிறது. 2-ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான கட்டுமான பணிகள் செய்துவரும் சொத்துக்கும் தாவா சொத்துக்கும் எவ்விதமான சம்மந்தமும் இல்லை. அதனால்தான் இந்த மனு 01.11.2018 அன்று உள்நோக்கத்துடன் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த வழக்கில் வாதிகள் தரப்பு சாட்சி விசாரணையானது 13.08.2018 அன்று ஆரம்பிக்கப்பட்டு முதல் விசாரணை தொடர்ச்சிக்காக 29.08.2018, 20.09.2018, 11.10.2018 மற்றும் 01.11.2018 ஆகிய தேதிகளில் தொடர்ந்து 4 வாய்தாக்கள் சுமார் 2-1/2 மாதங்களாக வாய்தா ஒத்தி வாங்கிய பிறகு நீதிமன்றத்தின் நேரத்தை வீணடிக்கும்விதமாக மனுதாரர்கள் இந்த மனுவைத் தாக்கல் செய்துள்ளனர். வழக்கை காலங்கடத்த வேண்டுமென்ற எண்ணத்தில் மனுதாரர்கள் 01.11.2018

அன்று இந்த மனுவைத் தாக்கல் செய்துள்ளனா். இந்த வழக்கில் மனுதாரா்கள்/வாதிகளுக்கு நல்ல கட்சியில்லை என்பதால் வழக்கை காலங்கடத்த வேண்டுமென்ற எண்ணத்தில் இம்மனுவை தாக்கல் செய்துள்ளனா். எதிா்மனுதாரா்கள் மனுதாரா்களின் சொத்தில் ஆக்கிரமித்திருந்தால் அதனை கண்டறிய நிலஅளவையா் நியமனம் செய்ய மனுத்தாக்கல் செய்யவில்லை. இந்த மனு துாயகரங்களுடன் மனுதாரா்களால் தாக்கல் செய்யப்படவில்லை. எனவே இம்மனுவை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும்.

4. <u>இம்மனுவில் தீா்வுக்குாிய பிரச்சனை</u>

மனுதாரா்கள் / வாதிகள் தாக்கல் செய்துள்ள இம்மனு அனுமதிக்கத்தக்கதா?

5. இம்மனுவில் மனுதாரா்கள் தரப்பில் 1-ம் மனுதாரா் ம.சா.1 ஆக சாட்சியம் அளித்துள்ளாா். மனுதாரா்கள் தரப்பில் ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.3 வரையிலான சான்றாவணங்கள் குறியிடப்பட்டுள்ளன. எதிா்மனுதாரா்கள் தரப்பில் சாட்சிகள் விசாாிக்கப்படவில்லை, சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

6. <u>தீா்வு</u>

மனுதாரா்கள் தரப்பில் அசல் வழக்கை எதிா்மனுதாரா்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பாிகாரம் கோாி தாக்கல் செய்துள்ளதாகவும், இடைக்கால உறுத்துக்கட்டளை பாிகாரம் கோாி மனுதாரா்கள் இடைமனு எண். 76/2016 தாக்கல் செய்துள்ளனா் என்றும், அந்த மனு முழு விசாரணைக்குப்பின் அனுமதிக்கப்பட்டு இடைக்கால உறுத்துக் கட்டளை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றும், அந்த நீதிமன்றத்தில் பிறப்பித்த உத்தரவை மீறி எதிா்மனுதாரா்கள்/பிரதிவாதிகள் தாவாச்சொத்தின் தென்புறத்தில் மனுதாரா்களுக்கு சொந்தமான சந்தில் 27.07.2018 அன்று ஆக்கிரமித்து வீடு கட்ட புதவடை தோண்டியுள்ளனா்என்றும், எதிா்மனுதாரா்களின் சட்டப்புறம்பான செய்கை குறித்து காவல்துறையில் மனுதாரா்கள் புகாா் கொடுத்தும் பயன் இல்லை என்றும், எனவே நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவை மதிக்காமல் எதிா்மனுதாரா்கள் செயல்படுவதால் எதிா்மனுதாரா்களை கைது செய்து சிவில் சிறைக்கு அனுப்ப உத்தரவிடக்கோாியுள்ள இம்மனுவை அனுமதிக்க வேண்டும் என்றும் வாதம் செய்யப்பட்டது.

7. எதிா்மனுதாரா்கள் தரப்பில் எதிா்மனுதாரா்கள் அவா்களுக்கு சொந்தமான இடத்தில் இந்த வழக்கில் சேராத இடத்தில்தான் கட்டுமானம் கட்டி வருகின்றனா் என்றும், தாவாச் சொத்தில் எந்தவிதமான கட்டுமானமும் கட்டவில்லை என்றும், அசல் வழக்கில் வாதிகள் தரப்பு சாட்சி முதல் விசாரணை 13.08.2018 அன்று ஆரம்பிக்கப்பட்ட பல தேதிகளில் ஒத்தி வாங்கிக்கொண்டு 01.11.2018 அன்று வாய்தா போடப்பட்டிருந்த அன்று மனுதாரா்கள் இந்த மனுவை வழக்கு நடவடிக்கைகளை காலங்கடத்தவும், நீதிமன்ற நேரத்தை வீணடிக்கவும் இந்த

மனுவைத் தாக்கல் செய்துள்ளனா் என்றும், மனுதாரா்கள் தூய கரங்களுடன் இம்மனுவைத் தாக்கல் செய்யவில்லை என்றும், மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் வாதம் செய்யப்பட்டது.

8. இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டன. வழக்குக்கோப்புக்கள் பாிசீலிக்கப்பட்டது. மனுதாரா்கள் தரப்பு வாதத்திற்கு ஆதரவாக 1-ம் மனுதாரா் வைத்தீஸ்வரன்கோயில் காவல்துறை உதவி ஆய்வாளா் மற்றும் நாகப்பட்டினம் காவல்துறை மாவட்ட கண்காணிப்பாளருக்கு கொடுத்த புகாா் மனுக்களின் நகல்களின் வாிசை ( 3 மனுக்கள்) ம.சா.ஆ.1 ஆகவும், 1-ம் மனுதாரா் நாகப்பட்டினம் காவல்துறை கண்காணிப்பாளா் அலுவலகத்தில் புகாா் கொடுத்ததற்கான இரண்டு ஒப்புகைச் சீட்டுக்கள் ம.சா.ஆ.2 ஆகவும், சி.டியுடன் கூடிய 6 புகைப்படங்கள் ம.சா.ஆ.3 ஆகவும் சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

9. வழக்குக் கோப்புக்களை பாிசீலனை செய்தபோது மனுதாரா்கள்/வாதிகள் தரப்பில் இடைமனு எண். 76/16 ல் இடைக்கால உறுத்துக்கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றும், அந்த உத்தரவை மதிக்காமல் எதிா்மனுதாரா்கள்/பிரதிவாதிகள் 27.07.2018-ம் தேதியன்று தாவா சொத்தின் தென்புறத்தில் மனுதாரா்களுக்கு சொந்தமான சந்தில் ஆக்கிரமித்து வீடு கட்ட புதவடை தோண்டி கட்டுமான பணி தொடங்கியுள்ளனா் என்றும், அவ்வாறான செய்கையானது இந்நீதிமன்றம் பிறப்பித்த இடைக்கால உறுத்துக்கட்டளை உத்தரவிற்கு முரணானது என்றும், எனவே இந்நீதிமன்றம் இடைக்கால உறுத்துக்கட்டளை மனு எண்.76/16 ல் பிறப்பித்த உத்தரவை மதிக்காமல் தாவாச்சொத்தில் ஆக்கிரமித்து கட்டுமானம் கட்டியுள்ளதால் எதிா்மனுதாரா்களை கைது செய்து சிவில் சிறைக்கு அனுப்பவேண்டுமென இம்மனுவில் கோரப்பட்டுள்ளது. எதிா்மனுதாரா்கள் தரப்பில் எதிா்மனுதாரா்கள் தாவாச்சொத்தில் ஆக்கிரமிப்பு செய்து கட்டுமானம் எதுவும் செய்யவில்லை என்றும், 2-ம் எதிா்மனுதாரருக்கு சொந்தமான சொத்தில்தான் கட்டுமானம் கட்டி வருகின்றனா் என்றும், எதிா்மனுதாரா்கள் நீதிமன்ற உத்தரவை அவமதிக்கும் வகையில் எந்த செயலும் செய்யவில்லை என்றும் மனுவைத் தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் வாதம் செய்யப்பட்டுள்ளது.

10. மனுதாரா்கள் தரப்பில் எதிா்மனுதாரா்கள் இந்நீதிமன்றம் பிறப்பித்த இடைக்கால உறுத்துக்கட்டளை உத்தரவை மதிக்காமல் தாவாச்சொத்தில் ஆக்கிரமித்து வீடு கட்டுவதற்காக புதவடை தோண்டி கட்டுமான பணி தொடங்கியுள்ளதாகக் கூறினாலும், அவ்வாறு எதிா்மனுதாரா்கள் தாவாச்சொத்தில் எவ்வளவு விஸ்தீரணம் உள்ள இடத்தில் ஆக்கிரமித்து கட்டுமானம் கட்ட ஆரம்பித்துள்ளனா் என்று மனுவின் ஆணையுறுதிப்பத்திரத்தில் குறிப்பிட்டுச்சொல்லவில்லை. அவ்வாறு மனுதாரா்கள் தாவாச்சொத்தில் ஆக்கிரமித்து

கட்டுமானம் கட்டிவருவதாகக் கூறி மனுதாரா் தாக்கல் செய்துள்ள புகைப்படங்கள் எப்போது எடுக்கப்பட்டவை, புகைப்படங்களில் உள்ள இடம்தான் தாவா சொத்தா? என்பது குறித்து எந்த விளக்கமும் மனுதாரா் தரப்பில் தரப்படவில்லை. எதிர்மனுதாரா்கள் தரப்பில் 2-ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான சொத்தில்தான் எதிர்மனுதாரா்கள் புதிய வீடு கட்ட புதவடை தோண்டியுள்ளதாக கூறியுள்ள நிலையில், மனுதாரா்கள் தாவாச்சொத்தில்தான் எதிர்மனுதாரா்கள் ஆக்கிரமித்து கட்டுமானம் கட்டி வருகின்றனா் என்பதை நிரூபிக்கக்கூடிய தெளிவான ஆவணங்கள் எதையும் மனுதாரா்கள் தரப்பில் தாக்கல் செய்யவில்லை. மேற்கண்ட சூழ்நிலையில் எதிர்மனுதாரா் நீதிமன்ற உத்தரவை மீறி உத்தரவு தேதிக்கு பிறகு தாவா சொத்தில் ஆக்கிரமிப்பு செய்துவிட்டாா் என்பதை மனுதாரா் தகுந்த சாட்சிய சான்றாவணங்கள் மூலம் நிரூபிக்க தவறிவிட்டதாகவே இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே இந்நிலையில் இந்நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவை மதிக்காமல் உத்தரவை மீறி எதிர்மனுதாரா்கள்/பிரதிவாதிகள் செயல்படுவதால் எதிர்மனுதாரா்களை கைது செய்து சிவில் சிறைக்கு அனுப்ப உத்தரவிடக்கோாி மனுதாரா்கள் தாக்கல் செய்துள்ள இம்மனு அனுமதிக்கத்தக்கதல்ல என்றும், மனுவின் தன்மையை கருதி இம்மனுவில் இருதரப்பினரும் அவரவா் செலவுத் தொகையை அவரவா்களே ஏற்றுக்கொள்ளவேண்டுமென்றும் இந்நீதிமன்றம் முடிவு செய்து அவ்வாறு இம்மனுவின் பிரச்சினைக்கு தீா்வு காணப்படுகிறது.

11. முடிவில் இம்மனு செலவுத் தொகையின்றி தள்ளுபடி செய்யப்பட்டு உத்தரவு பிறப்பிக்கப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிப்பொறியில் நேரடியாகத் தட்டச்சு செய்யப்பட்டதை என்னால் சாிபாா்க்கப்பட்டு பிழைதிருத்தம் செய்யப்பட்டு 2022-ம் ஆண்டு பிப்ரவாி மாதம் 24-ம்நாள் என் கையொப்பம் இடப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

மாவட்ட உாிமையியல் நீதிபதி,
சீா்காழி.

<u>பின் இணைப்பு</u>
<u>மனுதாரா்கள் தரப்பு சாட்சிகள்</u>

ம.சா.1 திரு சின்னதுரை ( 1-ம் மனுதாரா் )

<u>எதிர்மனுதாரா்கள் தரப்பு சாட்சிகள்</u> -இல்லை-

<u>மனுதாரா்கள் தரப்பு சான்றாவணங்கள்</u>

ம.சா.ஆ.1 - 1-ம் மனுதாரா் வைத்தீஸ்வரன்கோயில் காவல் உதவி ஆய்வாளா், நாகப்பட்டினம் மாவட்ட கண்காணிப்பாளா் ஆகியோருக்கு அனுப்பிய புகாா் மனுக்களின் நகல்கள் ( மூன்று மனுக்களின் நகல்கள்)

ம.சா.ஆ.2 – 1–ம் மனுதாராின் புகாா் மனுவினை நாகப்பட்டினம் மாவட்ட கண்காணிப்பாளா் பெற்றுக்கொண்டதற்காக கொடுத்த ஒப்புகைச்சீட்டுக்களின் வாிசை ( 2 ஒப்புகைச்சீட்டுக்கள்)

ம.சா.ஆ.3 – சி.டி.யுடன் கூடிய ஆறு புகைப்படங்கள்

எதிா்மனுதாரா்கள் தரப்பு சான்றாவணங்கள் –இல்லை–

மா.உ.நீ.

நோிய / வரைவு உத்தரவு
அசல் வழக்கு எண். 21/2016-ல்
இடைமனு எண். 1336/2018
நாள் : 24.02.2022